பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 05 ஞாயிற்றுக்கிழமை 21.11.2021 கதிர் 244

## 12 கைதிகளுக்கு கொரோனா உறுதி

பதுளை சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டுள்ள 12 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது எனக் கண்டறியப் பட்டுள்ளது.

நேற்று நடத்தப்பட்ட பி.சி. ஆர். பரிசோத னைகளில் இந் தத் தொற்றாளர்கள் 2

# அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை!

## வவுனியாவில் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணித் தலைவர் ஞானசார தேரர் தெரிவிப்பு



(வவுனியா நிருபர்)

அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை செய் யப்படவுள்ளனர் என்று 'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்தார் என்று முன்னாள் அரசியல் கைதி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவித்தார்.

'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியுடன் நெரூர் வவுனியாவில் நடத்திய சந்திப்பு தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற செயலணியின் கூட்டம் செயல ணித் தலைவர் ஞானசார தேரர் தலை மையில் வவுனியாவில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் அரசியல் 2

# சுமந்திரன் பேசிய கூட்டம் கனடாவில் குழப்பப்பட்டது

## கும்பலாகக் கூடியோர் கூச்சல்



குழப்பத்தில்



கூட்டத்தில்

ரொறன்ரோ,நவம்பர்21

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனடா பிரிவினர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை முன்நிறுத்தி ரொறன்ரோவில் நடத்திய கூட்டம் அங்கு ஒரு குழுவினர் கூச்சலிட்டுக் குழப் பியமையால் இடையில் நின்றது.** 2

## சிங்களப் பேரினவாதிகளின் பரப்புரைக்கு அவல் கொடுத்த ஜனநாயக விரோதிகள்!

### சுமந்திரன் எம்.பியின் பேச்சைக் குழப்பியமைக்கு கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

தமிழர்கள் என்றால் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்ற சிங்கள பௌத்த பேரினவாதிகளின் பரப்புரைக்கு கனடாவில் சுமந்திரன் எம்.பியின் பேச்சைக் குழப்பிய ஜனநாயக விரோதிகள் அவல் கொடுத்தி ருக்கின்றார்கள். இதனால் பாதிக்கப்படுபவர்கள் எங்கள் தாயக உறவுகளே.

- இவ்வாறு கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் வே.தங்கவேலு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரொறன்ரோவில் நடத்திய பொதுக் கூட்டம் சுமுகமாக நடந்தது. ஆனால், இறுதி 2

## தனுஷ்கோடி, பாம்பன் பகுதிகளை நேரில் பார்த்தார் தூதுவர் பாக்லே



தமிழக மீனவர்களுக்கு மத்திய மாநில அரசுகளால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்து இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லே நேரில் பார்வையிட்டார்.

(ந.லோகதயாளன்)

இந்திய - இலங்கை மீனவர் களுக்கு இடையிலான முரண் பாடுகளைத் தீர்த்து சுமுக நிலையை ஏற்படுத்தும் தமது முயற்சியின் ஒரு 2

## வன்முறைக் கும்பல் பெரும் அட்டகாசம்!

### தனித்து நின்று விரட்டியடித்த குடும்பஸ்தர்

(ந.லோகதயாளன்)

கிளாலிப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த வாள்வெட்டுக் கும் பலை குடும்பஸ்தர் தனித்து நின்று வீட்டில் இருந்த கத்தி மற்றும் மிளகாய்த்தூள் துணையுடன் விரட்டி அடித்துள்ளார். 8

## 230 கிலோ கேரள கஞ்சா மண்டைதீவுக் கடலில் மீட்பு

### சந்தேகநபர்கள் தப்பியோட்டம்



(ந.லோகதயாளன்)

யாழ்., மண்டைதீவுக் கடலில் வைத்து 6 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான 230 கிலோகிராம் எடையுடைய கேரள கஞ்சாவும் படகு ஒன்றும் மண்டைதீவு கடற்படையின ரால் மீட்கப்பட்டுள்ளது. 2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: அரசியல் சூழ்ச்சி கிடையாது

### ரொஹான் குணரட்ன கருத்து

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் அரசியல் சூழ்ச்சி எதுவும் கிடை யாது எனச் சர்வதேச பயங்கர வாதம் தொடர்பான நிபுணர் பேராசிரியர் ரொஹான் குண ரட்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்தத் தாக்குதல் ஏன் நடத் தப்படுகின்றது என்பது குறித்து சஹ்ரான் காணொளியில் விளக்கியுள்ளார். அல்லாஹ் வின் விருப்பத்தின் பேரில் 2

## ஞானசாரரின் செயலணி இன்று யாழ். விஜயம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.21

ஞானசாரர் தேரர் தலை மையிலான 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியினர் இன்று யாழ்ப்பாணத்துக்கு வந்தனர்.

இந்தச் செயலணி தொடர் பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படும் 2

## ஞானசாரரின் செயலணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் குறித்த செயலணியில் அங்கம் வகிப்பவர்கள் இன்று யாழ்ப்பாணத்துக்கு வந்து வலம்புரி விடுதியில் சந்திப்பை நடத்தினர்.

இதில் மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு கருத்துக்களைப் பரிமாறினார்.

## 12 கைதிகளுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டறியப்பட்டுள்ளனர் என்று பதுளை நிர்வாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பியல் பத்ம தெரிவித்துள்ளார்.

95 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலேயே 12 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்றாளர்களைக் கண்டறிய ரெபீட் அன்டிஜன் பரிசோதனைகளைநடத்தவுள்ளதாகவும் பியல் பத்ம மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் கைதிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகளின் விடுதலை, தொல்பொருள் திணைக்களங்களின் நடவடிக்கை, பௌத்த விகாரரைகளை அமைப்பது, எமது மத வழிபாடுகள் மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினை, மாவீரர் தினம் தொடர்பில்எமதுஉரிமைகள்மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினை குறித்து பேசியிருந்தேன்.

அப்போது ஞானசார தேரரிடமிருந்து வந்த பதிலில், 'அரசியல் கைதிகள் தொடர்பில் ஜனாதிபதி சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பேசியுள்ளார். மிக விரைவில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற செய்தி கிடைத்தது. இது தொடர்பில் ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார்' என்றார்.

இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் இருந்துள்ளார்கள். மகாவம்சத்தில் தமிழ் பௌத்த துறவிகள் இருந்தமைக்கான ஆதாரம் உண்டு. தமிழ் மக்களின் வழிபாட்டுக்கான உரிமை மறுக்கப்படும் இடங்களைப் பார்வையிடுவதாக ஞானசார தேரர் தெரிவித்தார். அத்துடன் குருந்தூர் மலையில் பௌத்த சின்னம் இருக்கின்றது எனத் தெரிவித்தார். அதனை நானும் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால், சிவனுக்கும் அங்கு சிலை இருந்தது. அது பின்பு தமிழர்களால் அகற்றப்பட்டு முருகனுக்கான வழிபாடு அதன் பின் பிள்ளையார் வழிபாடு இடம் பெற்றது. அது மக்களின் அறியாமையால் நடந்தது. தொல்பொருள் ரீதியில் எமக்கும் அங்கு உரிமை உள்ளது என நான் தெரிவித்தபோது, கதிர்காமம் போன்று இரு மதத்தினரும் வழிபடக் கூடிய நிலை வருவதைத் தான் விருப்புவதாகத் தெரிவித்தார்.

விரும்பியோ விரும்பாமலே எமது பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமையப் போகின்றன. 1600 இற்கும் மேற்பட்ட கோயில்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதற்கான எந்தவித நடவடிக்கைகளுகம் இல்லை. பலமான எதிரியை நாம் எதிர்க்க முடியாது. அதனால் நாம் இணைந்துவழிபாடுகளைமேற்கொள்ள முடியும்.

மாவீரர் தினம் தொடர்பில் கேட்டிருந்தேன். பல்வேறு காலங்களிலும் மரணித்த மாவீரர்களை நினைவுகூர உரிமை உள்ளது எனத் தெரிவித்தேன். படுகொலைகள் பல நடந்தன. அதனை நாம் அன்றாடம் நினைவுகூர முடியாது. இதனை ஒரே வாரத்தில் செய்கின்றோம் எனத தெரிவித்தேன். இதன்போது இந்த விடயம் தொடர்பில் தான் முழுமையாகப் பதில் செல்ல முடியாது எனவும், இருந்தாலும் விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியாக மேற்கொண்ட விடயம் தவறு. அதற்கு அனுமதிக்க முடியாது. உங்களுடைய வலிகள், பிரச்சினைகளைப் புரிந்திருந்தாலும் இதற்கான பதிலை வழங்கக் கூடிய நிலையில் இல்லை. எங்களுடன் சேர்ந்து இவற்றை மறந்து நீங்கள் பயணிக்க வேண்டும் எனக் கூறினார். இதைவிட பிரச்சினையான பல விடயங்கள் இருக்கின்றன. சாப்பாடு இல்லை, வீடு இல்லை, தண்ணீர் இல்லை இவை பற்றி நாம் பார்ப்போம் எனத் தெரிவித்தார்.

அதேநேரம் இந்த 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியின் நோக்கமாக நான் உணர்வது, யாழ்ப்பாண தேசவழமைச் சட்டம் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இருக்கும் சரிஜா சட்டத்தை இல்லாதொழிக்கப்போகின்றார்கள். சைவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கான உக்கிரத்தை ஏற்படுத்தி இன்னுதொரு குளிர் காய்த்தல் நிகழ்வை நடத்தப் போகின்றார்கள். கிறிஸ்தவ மற்றும் சைவ மோதலை ஏற்படுத்தக்கூடிய அத்தனை விடயங்களும் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியின் ஊடாகப் பெறப்படுகின்றது. இதுதான் இதன் நோக்கமாக இருக்கும் என நான் நம்புகின்றேன். கிறிஸ்தவர்கள், சைவர்களுக்கான பிரச்சினைகளுக்கு நீண்ட நேரம் கொடுக்கின்றார்கள். அதனைத் தேடி தேடி எழுதுகின்றார்கள். எனவே, மக்கள் தமதுபிரச்சினைகளைப்பேசவேண்டும். அவர்களின் நிகழ்சி நிரலில் பலிக்கடா ஆகிவிடாதீர்கள் - என்றார். (100)

## சுமந்திரன் பேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் பேச்சாளர்களாய் பங்குபற்றிய யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் பாதுகாவலர்களின் உதவியுடன் பாதுகாப்பாக வெளியேறினர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துடனான பேச்சுக்காக வொஷிங்கடன் சென்றிருக்கும் சுமந்திரன் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கனடா சென்றிருந்தார். அவரையும் இரா.சாணக்கியனையும் வைத்து ஒரு பொதுக் கூட்டத்துக்கு கூட்டமைப்பின் கனடா கிளை ஏற்பாடு செய்திருந்தது. சில நூறு பேர் கூட்டத்துக்கு வருகை தந்திருந்தனர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரே ஒரு குழுவினர் கூட்டம் நடைபெறும் மண்டபத்தின் முன்புறத்தில் புலிக்கொடி ஒன்றை ஏற்றியிருந்தனர்.

கூட்டம் ஆரம்பமாகி சாணக்கியன் பேசினார். அவரது உரை எந்தத் தடங்கலுமின்றி நடந்தது. அவரின் உரையின் முடிவில் பலத்த கரகோமும் கிட்டியது.

சுமந்திரன் பேசத் தொடங்கியபோது ஆரம்பத்தில் சில குறுக்கீடுகள், குழப்பங்கள் இருந்தன. எனினும் அவற்றை சமாளித்து சுமார் பதினைந்து நிமிட நேரம் அவர் உரையாற்றினார்.

தாயக மண் பறிபோகமல் காப்பாற்ற இடைக்காலத்துக்கேனும் ஒரு தீர்வை நாம் எட்ட வேண்டும், தாயகம் பறிபோனால் எதுவும் செய்யமுடியாது என அவர் கூறிக்கொண்டிருந்தபோது திடீரென குறுக்கீடுகள், சத்தங்கள் குழப்பங்கள் ஏற்பட்டன. சில டசின் பேர் ஆக்கிரோஷமாகச் சத்தமிட்டனர். "துரோகி சுமந்திரன் திரும்பிப் போ" என அவர்கள் கூக்குரலிட்டனர். ஒவ்வொரு கேள்விக்கும் சுமந்திரன் பதில் கூறுவார் எனத் திரும்பத் திரும்ப அறிவிக்கப்பட்டும் கூட்டத்தைக் குழப்பி யோர் அடங்குபவர்களாக இருக்கவில்லை.

''எங்களுக்குத் தீர்வு வேண்டாம்; தனி ஈழம் தான் வேண்டும்", "பத்து வருடங்களாக என்ன பிடுங்கினீர்கள்?'' என்றெல்லாம் சத்தங்கள் ஆக்ரோஷமாக எழுந்தன.

தொடர்ந்து பேச முடியாத நிலைமை ஏற்பட்டமையை அடுத்து சுமந்திரனும் சாணக்கியனும் கூட்டம் நடைபெற்ற மண்டபத்தை விட்டு வெளியேறினர். இடையே பொலிஸாரும், பாதுகாவலரும் அவர்கள் வெளியேறுவதற்கான பாதுகாப்பை வழங்கினார்.

சுமந்திரனை பேசவிடாமல் துரத்தியடித்தோம் என்று கூட்டத்தைக் குழப்பியவர்கள் மகிழ்ச்சியுடன் புறப்பட்டனர்.

கனடாவில் சுமந்திரனை பேசவிடாது துரத்தியடித்த தமிழர்கள் என்ற சாரப்பட சமூக ஊடகங்களில் பெருமளவிலான பதிவுகள் பகிரப்பட்டமையையும் அவதானிக்க முடிந்தது.

நாளை வொஷிங்டனில் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துடன் நடைபெறவிருக்கும் சந்திப்புக்காக இன்று மாலை சுமந்திரன் வொஷிங்டன் புறப்பட்டார்.

## சிங்களப் பேரினவாதிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில் எம்.ஏ. சுமந்திரன் பேசிக்கொண்டிருந்தபோது மண்டபத்தின் பின்புறம் நின்று கொண்டிருந்த சிலர் பேச்சைத் தொடரவிடாமல் உரத்த குரலில் கூச்சல் போடத் தொடங்கினார்கள்.

கூட்டத்தில் அரை மணித்தியாலம் பேசிய இராசமாணிக்கம் சாணக்கியன் எந்தக் குறுக்கீடும் இல்லாது பேசி முடித்தார். அவருக்குப் பலத்த கைத்தட்டலும் கிடைத்தது.

அவையோர் எழுத்தில் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்படும் என்று பலமுறை சொல்லப்பட்டது. இருந்தும் அவற்றைச் செவிமடுக்காது தொடர்ந்து சுமந்திரனைப் பேச விடாது கூட்டத்தைக் குழப்பினார்கள். இதனால் கூட்டத்தை முடிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டோம். இப்படி நடப்பது இதுவே முதல் தடவை ஆகும்.

கூட்டம் தொடங்கு முன்னர் சிலர் மண்டபத்துக்குஎதிர்ப்புறமாகபுலிக்கொடியுடன் நின்றிருந்தார்கள். கனடா நாட்டில் அமைதியான முறையில் எதிர்ப்பைக் காட்ட ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு. கனடா ஒரு ஜனநாயக நாடு என்ற முறையில் அமைதியான முறையில் எதிர்ப்பைக் காட்ட சட்டம் அனுமதிக்கிறது.

கனேடிய தமிழ்ச் சமூகம் சட்டத்தை மதிக்கின்ற ஒரு சமூகம். இந்த நாட்டில் எல்லோருக்கும் பேச்சுரிமை மற்றும் கருத்துரிமை நூறு விழுக்காடு இருக்கின்றது. ஆனால், சட்டத்தை மதியாது சட்டத்தைக் கையில் எடுக்கும் உரிமை யாருக்கும் இல்லை. படித்தவர்களைப் பிடிக்காத ஒரு சிலரே சட்டத்தை தங்கள் கையில் எடுக்கத் துணிகின்றார்கள்.

இன்றைய பூகோள அரசியல் சூழலில் தமிழ் மக்களது உரிமைகளை ஜனநாயக வழிமுறையில் - பேச்சுகள் மூலம் - அமெரிக்கா, இந்தியா போன்ற வெளிநாடுகளின் ஆதரவுடன்தான் பெறமுடியும். எங்கள் வழி வன்முறைதான் என்றால் மேற்குலக நாடுகள் முன்னர் போல் எம்மைக் கைவிட்டு விடும்.

இதைத்தான் கூட்டத்தை குழப்பியவர்கள் விரும்புகிறார்களா எனக் கேட்க விரும்புகிறோம்? அவர்களது ஜனநாயக விரோத செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர்களை அவமதித்தது அவர்களுக்கு வாக்களித்த மக்களை அவமதித்தற்கு ஒப்பானதாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன் மற்றும் சாணக்கியன் இருவரும் எமது தாயக மக்களால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள். அந்த மண்ணில் நின்றுகொண்டு அந்த மக்களுக்காக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் குரல் கொடுப்பவர்கள். குறிப்பாக சுமந்திரன் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளது இராஜதந்திரிகள், தூதுவர்கள் மற்றும் அதிகாரிகளோடு சம்பந்தன் ஐயாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க எங்கள் மக்களது சிக்கல்கள், குறிப்பாக அரசியல் தீர்வு பற்றி தொடர்பாக தொடர்ச்சியாகப் பேசி வருபவர். அவரது அமெரிக்க வருகை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அந்த நாடு விடுத்த அழைப்பின் பேரிலேயே அவரும் ஜனாதிபதி சட்டத்தரணி கனக. ஈஸ்வரன் மற்றும் முனைவர் நிர்மலா சந்திரகாசன் வருகை தந்துள்ளார்கள்.

தமிழர்கள் என்றால் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்ற சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் பரப்புரைக்கு இந்த ஜனநாயக விரோதிகள் இன்று அவல் கொடுத்திருக்கின்றார்கள் எனக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இதனால் பாதிக்கப்படுபவர்கள் எங்கள் தாயக உறவுகளே - என்றுள்ளது.

## உயிர்த்த ஞாயிறு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜிஹாதிய புனிதப் போர் நடத்தப்படுகின்றது.

நியூசிலாந்தில் பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் நோக்கில் கிறிஸ்தவதேவாலயங்கள்மீதுதாக்குதல் நடத்தப்படுகின்றது. அல்லாஹ்வின் வீட்டுக்குள் தலையீடு செய்ய அனுமதிக்கப்படாது.

சஹ்ரானுடன் பேசிய அபுஹித் என்பவர் இந்திய பொலிஸ் உத்தியோகஸ்தராவார். அவரே ஈஸ்டர் தாக்குதல் பற்றி இலங்கைக்குத் தகவல் வழங்கியவர். தாக்குதல் நடத்தப்படுவதற்கு சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே இந்த எச்சரிக்கை வழங்கப்பட்டது.

இந்தட தாக்குதலின் பின்னணியில் அடிப்படைவாத, மதவாத மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளே காணப்படுகின்றன. அரசியல் சூழ்ச்சித் திட்டம் இல்லை - என்றார்.

## தனுஷ்கோடி, பாம்பன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமாக இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லே இராமேஸ்வரத்துக்கு நேரில் சென்றார்.

தமிழக மீனவர்களுக்கு மத்திய, மாநில அரசுகளால் ஏற்படுத்தி கொடுக்கபட்டுள்ள வசதிகளை தனுஷ்கோடி, பாம்பன் பகுதிகளில்இன்றுநேரில்அவர்பார்வையிட்டார்.

இந்த வசதிகள் குறித்து நேரில் பார்வையிடுவதற்காக இன்று அதிகாலை இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து விமானத்தில் புறப்பட்டு திருச்சி விமான நிலையத்தை அவர் சென்றடைந்தார்.

பின்னர் திருச்சியில் உள்ள இலங்கை அகதிகள் மறு வாழ்வு சிறப்பு முகாமில் தங்கியுள்ள அகதிகளை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். அங்கிருந்து சாலை மார்க்கமாக புறப்பட்ட இந்திய துணை தூதர் ராமேஸ்வரம் சென்றடைந்தார்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கர் லால் குமவத் மற்றும் மீன்வளத் துறை இயக்குநர்களுடன் தனுஷ்கோடி அரிச்சல்முனை, தனுஷ்கோடி வடக்கு கடற்கரை பகுதியில் மீனவர்கள் பயன்பாட்டிற்காக மாநில அரசால் கட்டி கொடுக்கப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகம், 1964 ஆம் ஆண்டு புயலில் அழிந்த தனுஷ்கோடி தேவாலயம் மற்றும் மக்கள் வசித்த பகுதிகளைச்சென்று அவர் பார்வையிட்டார்.

பின்னர் ராமேஸ்வரம் அடுத்துள்ள பாம்பன் குந்துகாலில் மத்திய அரசு சார்பில் 70 கோடி ரூபா மதிப்பில் கட்டப்பட்டு, ஆழ்கடல் மீன்பிடி விசைப்படகு மீனவர்களின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்ட துறைமுகத்தை நேரில் சென்று அங்குள்ளவசதிகள்குறித்துப்பார்வையிட்டார்.

மேலும் தனுஷ்கோடி பகுதியில் பார்வையிடும் போது அப்பகுதியில் உள்ள மீனவர்களை சந்தித்து கடலின் ஆழம், சீதோசன நிலை குறித்தும், மீனவர்களுக்கான வசதிகளை மத்திய, மாநில அரசுகள் எவ்வாறு செய்து கொடுத்துள்ளார்கள் என்பது குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இலங்கைக்கான இந்தியத் தூதர் மீனவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்து பார்ப்பதற்காக தாம் வந்துள்ளார் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து ராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகே உள்ள நட்சத்திர விடுதியில் மீன்வளத்துறை உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தினார். பின் ராமேஸ்வரத்தில்இருந்துரயில்மூலமாகசென்னைக்கு புறப்பட்டுச் சென்றார்.

## 230 கிலோ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகாலை 2.30 மணியளவில் கடற்படையினர் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை சந்தேகத்துக்கு இடமான முறையில் படகு ஒன்று வருவதை அவதானித்தனர்.

இதன்போது குறித்த படகைச் சுற்றி வளைத்தவேளை படகிலிருந்தவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், படகில் ஏழு மூட்டைகளிலிருந்த கேரள கஞ்சாவையும் படகையும் கடற்படையினர் மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட படகும் கஞ்சாவும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளன.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கடல் வளத்துக்கு ஆபத்து!

**தமிழர் தாயகத்தில் தீராத பிரச்சினையாக இருக்கும் விடயங்களில் ஒன்று மீனவர் விவகாரம். தமிழர் தாயகக் கடலில் எல்லை மீறும் இந்திய மீனவர்களால் கடல் வளம் பாதிக்கப்படுகின்றது, நமது மீனவர்களின் வாழ்வாதாரங்கள் பறிக்கப்படுகின்றன என்றெல்லாம் வேதனைப் படுகின்றோம். இந்திய மீனவர்களின் மடி வலை மீன் பிடிப்பால் கடலின் வளம் கடலின் அடிமட்டத்தோடு அள்ளப்படுகின்றது, மீன்வளம் முற்றாகச் சுரண்டி அழிக்கப் படுகின்றது என்றெல்லாம் குமுறுகின்றோம். அதனால் மடிவலை மீன் பிடிப்புக்கு நமது கடலில் தடைவிதித்து சட்டம் கூடக் கொண்டு வந்துள்ளோம்.**

**நமது கடல்வளம் – சமுத்திரத் திரவியம் அழியாமல் இருக்க வேண்டுமென்ற எமது சிரத்தை – கவலை – நியாயமானதுதான். அயலக மீனவர் அதைச் செய்யும் போது நம்மால் பொறுக்க முடியவில்லை. அதனால் எம் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றோம்.**

**ஆனால், மறுபுறத்தில் அதிலும் விட மிகவும் மோசமான ஒரு நாச வேலை நம் பக்கத்தில் நடந்து கொண்டிருக்கின்றது. அது குறித்துக் கவனியாமல் – சிரத்தை கொள்ளாமல் – பார்த்து இருக்கின்றோம்.**

**வடக்குக் கடலில் இரண்டு நாள்களில் இடம்பெற்ற இரு சம்பவங்கள் இந்தவிடயத்தை ஒட்டி பெரும் கவலையை ஏற்படுத்தி இருக்கின்றன. மன்னாரில் நேற்று ஆயிரம் கிலோ ஜெலிக்நைற்றுடன் சிலர் சிக்கி இருக்கின் றனர். இன்று சுமார் ஆயிரத்து இருநூறு கிலோ ஜெலிக் நைற் கடற்படையிடம் சிக்கியிருப்பதாகத் தெரிகின்றது.**

**இத்தகவல்கள் மிக ஆபத்தான ஒரு நிலைமைக்கு எச்சரிக்கை தருகின்றன. கடலில் டைனமைட் வெடி வைத்து மீன் பிடிக்கும் மிக மோசமான நிலைமை பெருகி வருவதற்கான எச்சரிக்கை இது. இத்துணை ஜெலிக் நைற் மீன்பிடிக்குப் பயன்படுத்தப்படுமானால் இலங்கைக் கடலின் வளமான திரவியங்கள் அடியோடு அழிந்து போகும் பேராபத்து ஏற்படும்.**

**சம்பந்தப்பட்ட தரப்புகளின் தகவலின்படி இரண்டு அல்லது மூன்று கிலோ ஜெலிக்நைற் பயன்படுத்தி ஒரு குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டால் சாதாரணமாக ஐயாயிரம் கிலோ வரை மீன்கள் செத்து மிதக்கும். அவற்றை இரண்டு, மூன்று வள்ளங்களில் அள்ளிவந்து விற்பார்கள். இப்படி வெடி வைக்கும் போது அந்தக் கடல் சுற்றுவட்டாரத்தில் இருக்கும் பெரிய மீன்கள், கடல் உயிரினங்கள் மட்டுமல்லாமல் குஞ்சு, குருமன் எல்லாமே அடியோடு அழிக்கப்பட்டுவிடும். பல சமயங்களில் செத்து மிதக்கும் மீன்கள் முழுவதையும் கூட அதைச் செய்தவர்களால் அள்ள முடியாமல் போகும். அவ்வளவு தூரம் கடல் வள அழிவு நேரும்.**

**ஆக, ஒரு மடிவலை டிறோலர் பல வாரங்களாகச் செய்யும் அழிவு வேலையை இந்த டைனமைட் மீன்பிடி முறை சில செக்கன்களில் செய்து விடும்.**

**நம் மத்தியில் இருக்கும் இந்தப் பேரழிவு நாசத்தைப் பற்றிக் கவலைப்படாமல், இந்திய மீனவர் அத்துமீறல் குறித்து அதிகம் சிரத்தை கொண்டு ஆரவார எதிர்ப்புகள் பண்ணுவது அர்த்தமற்றது.**

**இங்கு பிடிபடும் இவ்வளவு தொகை ஜெலிக்நைற்றுகளும் முழுமையாக இங்கு பயன்படுத்தப்படுமானால் முழு இலங்கையின் கடல் வளமும் நினைத்துப் பார்க்க முடியாத பேரழிவை அடையும் என்பது திண்ணம்.**

**டைனமைட் வைத்துப் பிடிக்கப்பட்ட மீன்களை சாதாரண பாமர மக்களால் அடையாளம் காண முடியாவிட்டாலும், உரிய திணைக்களத்தினரும் கடற்படையினரும் மினைப் பார்த்து அதை உறுதிப்படுத்துவர். அப்படி இருந்தும் அத்தகைய மீன்களின் விற்பனையும் தங்குதடையின்றி – பிரச்சினை ஏதுமின்றி – தாராளமாக நடக்கின்றது. அந்த விற்பனைக்கு உரிய தடைநடவடிக்கை இல்லாதவரை இந்த பேரழிவு தொடரும். நமக்குள் நாமே தீராத பேரழிவை வைத்துக்கொண்டு, அயலக மீனவர் சமூகங்களுடன் அர்த்தமின்றி மோதிக் கொண்டிருப்போம்.**

## இலங்கையின் சொத்துக்களை விற்பதற்கு அமெரிக்கரான பஸிலுக்கு உரிமையில்லை

### விஜயதாச ராஜபக்ஷ காட்டம்



இலங்கையர்களுக்கு சொந்தமான சொத்துக்களை வெளிநாடுகளுக்கு வழங்கும் எவ்வித உரிமையும் அமெரிக்க பிரஜையான பஸில் ராஜபக்ஷவுக்கு இல்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர் நிதியமைச்சர் பதவியை மாத்திரமல்லது நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கவும் உரிமையில்லை எனவும் கூறியுள்ளார்.

கண்டியில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே விஜயதாஸ ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பஸில் ராஜபக்ஷவை, நிதியமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குமாறு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டமை காரணமாக இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

குறித்த அமெரிக்க நிறுவனம், அமெரிக்க பிரஜைகளை அச்சுறுத்தி, நடு இரவில் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை நடைமுறைப் படுத்தப்படுவதைத் தடுக்க உச்ச அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்.

தற்போதைய அரசாங்கத்தின் பல செயற்பாடுகள் சிக்கலுக்குரியவை. புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகளும் எந்த வகையிலும் பொருத்தமற்றவை.

புதிய அரசமைப்புச் சட்டவரைவை உருவாக்கும் முழு அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது. நாடாளுமன்றத்துக்கு வெளியில் சட்டத்தரணிகள் குழு ஒன்று உருவாக்கும் ஆவணத்துக்கு ஆதரவாகக் கைகளை உயர்த்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாரில்லை.

புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதாகக் கூறி அரசாங்கம் ஒரு மாயையை ஏற்படுத்தி வருகிறது.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் புதிய அரசமைப்புச் சட்டம் எந்த வகையிலும் நிறைவேற்றப்படமாட்டாது எனவும் விஜய தாஸ ராஜபக்ஷ உறுதியாகக் கூறியுள்ளார்.

## மஞ்சள் கோட்டில் மாணவரை பாதுகாப்போம்' தொனிப்பொருளில் விழிப்புணர்வு செயந்திட்டம்




'மஞ்சள் கோட்டில் மாணவரைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் வவுனியா முதல் வட்டுக்கோட்டை வரை விழிப்புணர்வு செயற்திட்டம் நேற்று(சனிக்கிழமை) ஆரம்பமானது.

குறித்த வேலைத்திட்டம் நேற்று காலை 8 மணியளவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் முன்பாக ஆரம்பமானது.

கிளி பீப்பிள் எனும் புலம்பெயர் அமைப்பின் நிதி பங்களிப்புடன் கல்வி கலாசார அபிவிருத்தி அமையத்தின் ஒழுங்கமைப்பால் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கல்வி கலாசார அபிவிருத்தி அமையத்தின் ஒழுங்கமைப்பில் கிளி பீப்பிளின் செயற்திட்டமான 'வவுனியா தொடக்கம் வட்டுக்கோட்டை வரை' வீதி விபத்துக்களைக் குறைக்கும் விழிப் புணர்வு பதாதைகளை பாடசாலை முன்பாக மற்றும் மக்கள் கூடும் பொது இடங்களில் நிறுவும் செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று காலை 8 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வில் வைத்தியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அண்மையில் விபத்தில் உயிரிழந்த பாடசாலை மாணவிக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் விழிப்புணர்வு பதாதைகள் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரயில்களில் மோதுண்டு இருவர் பரிதாப மரணம்

இரு ரயில்களில் மோதுண்டு இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொல்கஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலவ்வ ரயில் நிலையத்துக்கு அருகில், கொழும்பிலிருந்து பயணித்த ரயிலில் மோதுண்டு நபர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று பொல்கஹவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவரின் பெயர் விவரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. அதேவேளை, கொழும்பு, பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவு, மொரட்டுவை கொழும்பு பிரதான ரயில் மார்க்கத்துக்கு அருகில் கொழும்பிலிருந்து சென்ற ரயிலில் மோதுண்டு நபர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிவித்திகல பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பணவீக்கத்தை கட்டுப்படுத்த பாகிஸ்தான் நடவழக்கை




அதிகரித்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, வங்கிகளுக்கான திட்டமிடப்பட்ட பண இருப்புத் தேவையை ஒரு சதவீதத்தினால் பாகிஸ்தான் மத்திய வங்கி உயர்த்தியுள்ளது. இது 13 ஆண்டுகளில் முதல் முறையாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

பாகிஸ்தான் மத்திய வங்கியானது இரண்டு வாரங்களுக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளால் பராமரிக்கப்படும் சராசரி பண இருப்புத் தேவையை 5 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகவும், குறைந்தபட்ச இருப்புத்தேவையை ஒவ்வொரு நாளும் 3 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகவும் வைத்திருப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

திருத்தப்பட்ட சராசரி இருப்தேவையான 6 சதவீதமானது உடனடியாக அமுலாக்கப்பட்டுள்ள அதேசமயம் திருத்தப்பட்ட தினசரி குறைந்தபட்ச இருப் புத்தேவையான 4 சதவீதமும் சொற்ப நாள்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வங்கி அமைப்பில் அதிகப்படியான பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்த 13 ஆண்டுகளில் முதல் முறையாக வங்கிகளுக்கான ரொக்க இருப்பு வீகிதத்தினை மத்தியவங்கி உயர்த்தியது. இது பணவீக்கத்திற்கு பங்களிப்பதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர் என ஜியோ நியூஸ் தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பரில் 9 சதவீதமாக இருந்த பணவீக்கம் ஒக்டோபரில் 9.2 சதவீதமாக அதிகரித்தது, ஏனெனில் பாக்கிஸ்தானியர்கள் எரிசக்தி மற்றும் உணவுக்காக அதிக பணம் செலுத்தினர் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

அத்துடன், 2021 2022 நிதியாண்டில் பணவீக்கம் நெருக்கடியான முறையில் உயர்ந்திருக்கும் என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஆண்டின் கடுமையான கொரோனா நெருக்கடிகள் காரணமாக கீழ் நிலையில் இருந்த பொருளாதாரம் சுறுசுறுப்பாக மீண்டு வருவதால், பணத்திரட்டுகளின் வளர்ச்சி உட்பட கொள்கை அமைப்புகளை படிப்படியாக சீராக்க வேண்டிய அவசியம் உள்ளது' என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

அண்மைய மாதங்களில், பண வழங்கல் வளர்ச்சி மாற்றம் கண்டுள்ளது. இதனால் பண விநியோக வளர்ச்சியானது உள்நாட்டு தேவையை குறைக்கும். அதன் மூலம் தற்போதைய பொருளாதார மீட்சியை தக்கவைக்கவும், அரசாங்கத்தின் நடுத்தர கால பணவீக்க இலக்கை அடையவும், ரூபா மீதான அழுத்தத்தை குறைக்கவும் உதவும் என்றும் ஜியோ நியூஸ் தெரிவித்துள்ளது.

மேலும், டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியானது 176 ஆக உள்ள நிலையில் இறக்குமதியாளர்கள் பணம் செலுத்துவதற்கு டொலர்களின் தேவை அதிகரித்து.

இதனால் ரூபாவின் மதிப்பு நெருக்கடியில் உள்ளது. தவிரவும் 6 பில்லியன் டொலர்கள் மதிப்புள்ள கடன்களை மீளச் செலுத்துவது தொடர்பில் கவலைகள் உள்ளன.

# ஆப்கானில் சிறுவர்கள், குழந்தை தொழிலாளர்களாக மாறிய அவலம்

ஆப்கானிஸ்தானில் நிலவும் வறுமை காரணமாக 20 சதவீத சிறுவர்கள் குழந்தை தொழிலாளர்களாக மாறியுள்ளனர். 20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற போரால் ஏராளமான குடும்பங்கள் உடைமைகளை இழந்து இடம்பெயர்ந்துள்ளன.

பெற்றோர் பலர் வேலை இழந்ததால், குடும்பத்தின் வறுமையைப் போக்க சிறுவர்கள் திண்பண்டங்கள் விற்றும், கார்களைத் துடைத்தும், ஷ் பொலிஸ் செய்தும், குப்பை கூளங்களில் இருந்து மறுசுழற்சிக்குத் தேவைப்படும் பொருட்களை சேகரித்தும் வருவாய் ஈட்டி வருகின்றனர்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் ஒவ்வொரு 5 மணி நேரத்துக்கும் ஒரு குழந்தை ஊட்டச்சத்துக் குறைபாட்டால் உயிரிழப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



# தெஹ்ரீக் இ-லப்பை அமைப்பின் தடையை பாக்.அதிபர் நீக்கியதற்கு பொலிஸார் எதிர்ப்பு



தெஹ்ரீக் இ-லப்பைக் அமைப் பின் தடையை நீக்குவதாக பிரதமர் இம்ரான் தலைமையிலான பாகிஸ்தான் அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானமானது தாங்களை பலிகடா ஆக்கும் ஒரு செயற்பாடு என்றும், கடமையின் போது செய்த தனிப்பட்ட தியாகங்கள் புறக்கணிக்கப்படுகின்றன எனவும் பாகிஸ்தான் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட இஸ்லாமிய அமைப்பான தெஹ்ரீக் இ-லப்பைக் மீதான தடையை நீக்கியதாக பாகிஸ்தான் அண்மையில் அறிவித்தது. இந்த முடிவு சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

ஹ்ரீக் இ-லப்பைக் அமைப்பானது, அண்மையில் பஞ்சாப் மாகாணத்தில் போராட்டங்களை நடத்தியது. போராட்டத்தின் போது ஹ்ரீக் இ-லப்பைக் உறுப்பினருக்கும் அதிகாரிகளுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டதை அடுத்து வன்முறைகள் வெடித் தன.

இதன் விளைவாக ஆறு பொலிஸார் கொல்லப்பட்டதோடு 520 பேர் காயமடைந்தனர் என பஞ்சாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக ஏப்ரல் மாதம், ஹ்ரீக் இ-லப்பைக் அமைப்பு போராட்டத்தினை முன்னெடுத்தமையால் நான்கு அதிகாரிகள் உயிரிழந்ததோடு 741பேர் காயமடைந்தனர்.

குறித்த அமைப்பானது போராட்டங்களின் போது தமது தலைவர் சாத் ரிஷ்வியை விடுவிக்குமாறு கட்சியில் இருந்து தடைசெய்யப்பட்ட அந்தஸ்தை நீக்கவும், பிரான்ஸ் தூதரை நீக்கவும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சூடானில் போராட்டத்தில் 40 பேர் உயிரிழப்பு; அமெரிக்கா கண்டனம்!

சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெற்று வரும் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40ஆக உயர்ந்துள்ளது. இந்த நிலையில், சூடானில் மீண்டும் அப்துல்லா ஹம்டோ தலைமையிலான ஜனநாயக ஆட்சி நடைபெற வழிவகை செய்ய வேண்டும் என அமெரிக்கா தெரிவித் துள்ளது.

வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள சூடானில் கூட்டணி ஆட்சியை கவிழ்த்து கடந்த மாதம் 25ஆம் திகதி இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

இந்த ஆட்சியின் தலைவராக இராணுவத் தளபதியான ஜெனரல் ஃபடக் அல் பர்ஹன் செயற்பட்டு வருகிறார்.

இதனையடுத்து, இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து சூடானின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.



அதற்கமைய சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராக நடந்த போராட்டத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது சூடான் இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டிற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும் சூடானில் மீண்டும் அப்துல்லா ஹம்டோ தலைமையிலான ஜனநாயக ஆட்சி நடைபெற வழிவகை செய்ய வேண்டும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# டெல்லி போராட்டத்தில் உயிரிழந்த விவசாயிகளுக்கு ரூ. 25 லட்சம் வழங்க தெலுங்கானா முதல்வர் கோரிக்கை



வேளாண் சட்ட எதிர்ப்புப் போராட்டத்தில் உயிரிழந்த விவசாயிகளுக்கு 25 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டுமென தெலுங்கானா முதலமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.


இந்திய நாடாளுமன்றத்தில் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் கொண்டுவரப்பட்ட புதிய வேளாண் சட்டங்களில் பாதகமான அம்சங்கள் இருக்கின்றனர் எனக் கூறி டெல்லியில் விவசாயிகள் ஒரு வருடத்திற்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். தலைநகர் டெல்லியில் பஞ்சாப், ஹரியானா மாநில விவசாய சங்கங்கள் பிரதான அங்கம் வகித்த இந்தப் போராட்டத்தில் 700 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் பல்வேறு காரணிகளால் உயிரிழந்தனர் என்று கூறப்படுகிறது.

இந்திய மத்திய அரசு கொண்டு வந்த சர்ச்சைக்குரிய 3 வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெற முடிவுசெய்திருப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரு தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார். இதையடுத்து அரசியல் தலைவர்கள் பலரும் தமது தரப்புக் கருத்துக்களை முன்வைத்துவருகின்றனர்.

வேளாண் சட்ட எதிர்ப்புப் போராட்டத்தில் உயிரிழந்த விவசாயிகளுக்கு எங்களுடைய அரசு சார்பில் 3 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ள தெலுங்கானா முதலமைச்சர் சந்திரசேகர் ராவ், இந்திய மத்திய அரசு 25 லட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

விவசாயிகளுக்கு எதிரான வழக்குகளை வாபஸ் பெறவேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறோம். உயிரிழந்த ஒவ்வொரு விவசாயியின் குடும்பத்தினருக்கும் தலா ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

# விவசாயிகள் குடும்பத்துக்கு தலா ரூ. ஒரு கோடி இழப்பீடு பா.ஜ.க.எம்பி வருண் காந்தி பிரதமர் மோடிக்கு கடிதம்



டெல்லி போராட்டத்தில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பத்துக்கு, தலா ஒரு கோடி ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடிக்கு உத்தரப்பிரதேச மாநிலத்தின் பா.ஜ.க. எம்.பி.யான வருண் காந்தி கடிதம் எழுதியுள்ளார்.

மூன்று விவசாயச் சட்டங்களையும்திரும்பப் பெறும் அறிவிப்பை வரவேற்கிறேன். நமது விவசாயிகள் போராட்டத்தை முடித்துக்கொண்டு அவர்களது வீடுகளுக்குச் செல்லும் வகையில், விவசாயிகளின் இதரப் பிரச்சினைகளுக்கும் உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்று நான் கோருகிறேன்.

அமைதியான முறையிலேயே அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். விவசாயச் சட்டங்களைதிரும்பப்பெறுவதற்கான முடிவு விரைவில் எடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதன் மூலம் இறந்தவர்கள் காப்பாற்றப் பட்டிருக்கலாம். போராட்டத்தின் போது 700 விவசாயிகள் இறந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. போராட்டத்தில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு தலா ஒரு கோடி ரூபா இழப்பீடு வழங்க வேண்டும். விவசாயிகள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து பொய்வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டும். லகிம்பூர் வன் முறைக் குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான மற்றும் நியாயமான விசாரணை நடத்தப்படவேண்டும், என்று தனது கடிதத் தில் வருண் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

பா.ஜ.க. எம்.பியாக இருந்தாலும் விவசாயிகள்இயக்கத்துக்கு வருண் காந்தி தொடர்ச்சியாக ஆதரவு அளித்து வருகிறார் என்பதும் விவசாயிகளுக்கு ஆதரவாக பல முறை அறிக்கைகள் கொடுத்துள்ளார் என்பதும், லகிம்பூரில் விவசாயிகள் மீது வாகனத்தை ஏற்றிக் கொலை செய்த சம்ப வம் தொடர்பாகதனதுகண்டனத்தை பா.ஜ.க. தலைமைப் பீடத்துக்கு தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கன.

# நவ்ஜோத் சிங் சித்துவுக்கு கௌதம் கம்பீர் கண்டனம்



பஞ்சாப் மாநிலத்தின் காங்கிரஸ் கட்சித் தலைவரான நவ்ஜோத் சிங் சித்து, நேற்று முன்தினம் பாகிஸ்தானின் கர்தார்பூரில் உள்ள குருத்வாரா புனிதத்தலத்துக்கு வழிபாடு செய்யச்சென்றார். அப்போது நவ்ஜோத் சிங் சித்துவுக்கு அந்நாட்டுப் பிரதமர் இம்ரான்கான் சார்பில் உயர் அதிகாரிகள் வரவேற்பளித்தனர். குருத்வாராவில் வழிபட்ட பின் சித்து அளித்த பேட்டியில், 'பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் என் பெரியண்ணன்' எனக் கூறியமைக்கு காங்கிரஸுக்கு பா.ஜ.க.வினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் கிரிக்கெட் வீரரும், பா.ஜ.க. எம்.பி.யுமான கௌதம் கம்பீர், நவ்ஜோத் சிங் சித்துவை கடுமையாகச் சாடியுள்ளார். "பாகிஸ்தான் இராணுவத் தளபதி பாஜ்வாவைக் கட்டிப்பிடித்த சித்து, கர்தார்பூர் சாஹிப் சென்று இம்ரான் கானை பெரிய அண்ணன் என்று அழைக்கிறார். கடந்த ஒரு மாதத்தில் காஷ்மீரில் 40 பொதுமக்கள் மற்றும் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டமை குறித்து சித்து கருத்து எதுவும் கூறவில்லை.

இந்தியாவைப் பாதுகாக்க விரும்பும் மக்களுக்கு எதிராக அவர் செயல்படுகிறார். நவ்ஜோத் சிங் சித்து முதலில் தனது பிள்ளைகளை எல்லைக்கு அனுப்ப வேண்டும். அவரது பிள்ளைகள் இராணுவத்தில் இருந்திருந்தால், அவர் இம்ரான் கானை தனது பெரிய அண்ணன் என்று அழைத்திருப்பாரா? இதை விட வெட்கக்கேடான கருத்து சித்துவிடம் இருக்க முடியாது" என்று கம்பீர் தெரிவித்திருக்கிறார்.

# நாடாளுமன்றத்தில் இரத்துச்செய்யும்வரை போராட்டம் தொடருமென விவசாயிகள் சங்கத் தலைவர் அறிவிப்பு



நாடாளுமன்றத்தில் விவசாயச் சட்டங்கள் இரத்துச் செய்யப்படும் நாளுக்காகக் காத்திருப்போம், என்று இந்திய விவசாய சங்க தலைவர் ராகேஷ் டிகாயிட் டுவீட் செய்துள்ளார்.

சர்ச்சைக்குரியதாக மாறிய புதிய 3 வேளாண் சட்டங்களையும் மீளப்பெறுவதாக இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்திருந்தார். '3 வேளாண் சட்டங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் மிக விரிவான விவாதம் நடத்தப் பட்டுள்ளது.

அந்தச் சட்டங்களின் நலன் களை விவசாயிகளின் ஒரு பகுதியினருக்கு எங்களால் புரியவைக்க முடியவில்லை. ஒரு வருடத்துக்கு மேலாகப் போராடிவரும் விவசாயிகள் தங்களின் போராட்டத்தைக் கைவிட வேண்டும்' என்றுதெரிவித்திருந்தார். ஆயினும், போராட்டம் உடனடியாக நிறுத்தப்படமாட்டாது. நாடாளுமன்றத்தில் விவசாய சட்டங்கள் இரத்துச் செய்யப்படும் நாளுக்காகக் காத்திருப்போம், என்று விவசாய சங்க தலைவர் ராகேஷ் டிகாயிட் டுவீட் செய் துள்ளார். விவசாயிகளின் பிற பிரச்சினைகளையும் அரசு விவாதிக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.



# எல்லையில் நடந்த கொலை துரதிர்ஷ்டவசமானது பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் கவலை

இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் கடந்த 12 ஆம் திகதி இந்திய எல்லைப்பாதுகாப்பு படை வீரர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், பங்களாதேசத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர்.

மாடுகளைக் கடத்துவதற்காக எல்லையின் இருபுறமும் கூடிய கும்பலோடு ஏற்பட்ட மோதலையடுத்து தற்காப்புக்காக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலேயே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டன என இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினர் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் ஏ.கே.அப்துல் மொமன், எல்லையின் முன்களப் பகுதியில் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்தமாட்டோம் என்று உயர்மட்டத்திலிருந்து உறுதியளித்த போதிலும், இந்திய எல்லைப் பாதுகாப்பு படை வீரர்கள் தொடர்ந்து கொடிய ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

'பங்களாதேசத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, இந்தியராக இருந்தாலும் சரி, எல்லையில் யாரும் கொல்லப்படுவதை இரண்டு அரசுகளும் விரும்பவில்லை. பல்வேறு மட்டத்தில் பேச்சு நடந்துவரும் நிலையில், தற்போது நடந்த கொலைகள் கவலை அளிப்பனவாக உள்ளன.

இது இந்தியாவுக்கே அவமானம். எல்லையில் கொலை எதுவும் நடக்காது என்பதை இந்திய அதிகாரிகள் உறுதிசெய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# நைதரசன் திரவப் பசளையில் எந்தவித பயனும் இல்லை

## விவசாயிகள் கவலை



வாழைச்சேனை கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாய செய்கை வேளாண்மைக்கு இந்தியாவிலிருந்து அரசாங்கம் இறக்குமதி செய்த நஞ்சற்ற நனோ நைதரசன் திரவப்பசளையை தெளித்த நிலையில் இதுவரை பத்து வீதம் கூட எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் மூலம் நஞ்சு தன்மையற்ற நாடு எனும் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் இயற்கை உரத்தைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விழிப்பூட்டல் வேலைத்திட்டம் நாடுபூராகவும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

விவசாயிகளுக்கு யூரியா இரசாயன உரத்திற்கு பதிலாக இந்தியாவிலிருந்து அரசாங்கம் இறக்குமதி செய்த நஞ்சற்ற நனோ நைதரசன் திரவப்பசளையை அறிமுகப்படுத்தல் மற்றும் பாவனை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு விவசாய இராஜாங்க அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை கமநல சேவை நிலையத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்த இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனத்தின் நனோ நைதரசன் உர உற்பத்தியாளரான IFFCO நிறுவனத்தின் விவசாய சேவைகள் தலைமை அதிகாரி கலாநிதி, தருனேந்து சிங், விசேட நிபுணர் கலாநிதி. அனில் குமார், விசேட வெளிக்கள பிரதிநிதிகளான சுப்ரமணியன் மாரியப்பன் மற்றும் சிவலிங்கம் பரஞ்சோதி ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர். வாழைச்சேனை அடம்படிவட்டவான் கண்டத்திலுள்ள வயற்காணி ஒன்றினுள் நனோ நைதரசன் திரவப்பசளை எவ்வாறு விசிற வேண்டும் என்பது தொடர்பான செய்முறை பிரயோக பயிற்சி ஒன்றும் செய்து காட்டப்பட்ட நிலையில் எட்டு நாட்கள் கடந்த நிலையில் இதுவரையில் நனோ நைதரசன் திரவப் பசளை தெளிக்கப்பட்ட வேளாண்மையில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்களால் தெளிக்கப்பட்ட வேளாண்மையில் எந்தவித மாற்றமும் ஏற்படாத வகையில் ஏனைய விவசாயிகள் நாங்கள் எவ்வாறு இதனை பெற்றுக் கொண்டு அவர்களது வயல் நிலங்களுக்குப் பயன்படுத்துவது. நனோ நைதரசன் திரவப் பசளையை அரசாங்கம் இலவசமாக வழங்குவதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் நாங்கள் இதனைப்பெற்றுக் கொள்வதா இல்லையா என்ற சந்தேகம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே நனோ நைதரசன் திரவப் பசளை தெளிக்கப்பட்ட வேளாண்மையில் எந்தவித மாற்றமும் ஏற்படாத வகையில் நனோ நைதரசன் திரவப்பசளையை விவசாயகள் பெற்றுக்கொள்வதில்லை என்பதில் உறுதியாக உள்ளோம். வாழைச்சேனை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட இருபத்தைந்து விவசாய கண்டத்தில் 21 ஆயிரத்து 350 ஏக்கர் பெரும்போக விவசாய செய்கையை 4ஆயிரத்து 850 விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு இடம்பெற்றால் விவசாயிகள் நிலைமை கேள்விக்குறியாகவே காணப்படும்.

அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பி நாங்கள் விவசாய செய்கையில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் மேற்கொண்டோம். ஆனால் எமக்கு வழங்கப்பட்ட நனோ நைதரசன் திரவப்பசளையில் எந்தவித பயனும் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. எனவே விவசாய செய்கையைத் திறம்பட மேற்கொள்ள அரசாங்கம் எங்களுக்கு யூரியா உரத்தினை வழங்க முன்வருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த சாணக்கியன் உள்ளிட்டவர்களுக்கும் தடை

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த மட்டக்களப்பில் ஏழு பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் மட்டக்களப்பு நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சாணக்கியன், கோ.கருணாகரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத் திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஷ், முன்னாள் போராளிகள் நடராசா சுரேஸ், தம்பித்துரை கஜேந்திரன், பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர் சீ.புஷ்பலிங்கம் ஆகியோருக்கே இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக குறித்த நபர்கள் 20ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை நினை வேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

## குடிநீர் குழாய் உடைந்து நீர் விரயம் எந்தவித நடவடிக்கையும் இல்லை

### பொதுமக்கள் கவலை



அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை கிட்டங்கி பிரதான வீதியில் செல்லும் குடிதண்ணீர் குழாய் உடைந்து கடந்த ஒரு மாத காலமாக குடிதண்ணீர் விரையமாகிச் செல்கின்றது. எனினும் இவ்விடயம் குறித்து எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என பொதுமக்கள் குற்றம் சுமத்து கின்றனர்.

மேலும் கல்முனை பிராந்திய குடிநீர் வடிகால் அலுவலகம் காணப்படுகின்றதுடன் பிராந்திய அலுவலகத்தில் சேவையாற்றும் பல்வேறு அதிகாரிகள் பிரதான வீதியில் விரையமாகி ஓடிக்கொண்டிருக்கும் குடிநீரைக் கண்டும் காணாதமை போல் செல்கின்றனர். இவ்வாறு விரயமாகிச் செல்லும் குடிநீர் வீதியின் நெடுகிலும் ஓடிச்செல்வதால் பிரதான வீதியில் பயணிப்போர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இவ்வாறு குடிநீர் விரையமாவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

## மின்சார வேலியில் சிக்கி காட்டு யானை உயிரிழப்பு



காட்டு யானையொன்று மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்தமை தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேசத்தில் மல்வத்தை, புத்தங்கல காட்டுப் பகுதியில், காட்டு யானையொன்று, கடந்த வெள்ளிக்கிழமை இறந்திருந்தது.

இந்தக் காட்டு யானை மின் கம்பி வேலியில் அகப்பட்டே இறந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டிருந்தது.

இந்தவிடயம் தொடர்பில் தற்போது வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும், சம்மாந்துறை பொலிஸாரும் இணைந்து, இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான யானைகள் வருகை தந்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலையில் மணல் அகழ்வு 4 டிராக்டர்களுடன் 4 சந்தேகநபர்கள் கைது



திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு வன பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 உழவு இயந்திரங்களுடன் நான்கு சந்தேகநபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் பாலம்போட்டாறு வனப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சர்தாபுர விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் இந்த 4 உழவு இயந்திரங்களுடன் நான்கு சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர் இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் இன்று திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர் இவ்வாறு கைது செய்யப் பட்டவர்கள் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 25 மற்றும் 35 வயதிற்கும் இடைப் பட்டவர்கள் எனவும் தெரிய வருகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கை – மே.இ.தீவுகள் டெஸ்ட் தொடர் காலி மைதானத்தில் இன்று ஆரம்பமானது



இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகியது. இலங்கையணியின் களத் தடுப்புப் பயிற்சியாளருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்து இந்தத் தொடர் நடைபெறுமா என்ற சந்தேகம் நிலவியது. ஆயினும், வீரர்கள் எவருக்கும் தொற்று இல்லையென்பது உறுதியானதையடுத்து போட்டி சிக்கலின்றி ஆரம்பமானது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கையணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியுள்ளது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, பத்தும் நிசங்க ஜோடி முதல் விக்கெட்டுக்காக 139 ஓட்டங்களைச் சேர்த்தனர். பத்தும் நிசங்க 56 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். திமுத் கருணாரத்ன சதத்தினைப் பூர்த்தி செய்து களத்திலிருந்தார்.

இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்டிருந்த ஜெரேமி சொலொசொனொவின் தலைக் கவசத்தில் பந்து பட்டதால் அவர் களத்திலிருந்த அகற்றப்பட்டு ஸ்கான் செய்வதற்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்பது கவனிக்கத்தக்கது.

## எனது இறுதி ரி—20 போட்டி சென்னையிலேயே சூப்பர் கிங்ஸ் பாராட்டு விழாவில் டோனி



சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்துகொண்டு சென்னை அணியின் கப்டன்டோனி, சென்னைக்கும் தனக்குமான உறவு குறித்து பகிர்ந்து கொண்டார்.

சென்னைக்கும் எனக்குமான பந்தம் நீண்ட நாள்களாகத் தொடர்ந்து வருகிறது. அது ஐ.பி.எல். கிரிக்கெட் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே தொடங்கிவிட்டது. நான் என்னுடைய முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடியது சென்னையில்தான். அப்போதே தொடங்கியது சென்னையுடனான என் உறவு.

2008 இல் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி என்னை தேர்வு செய்யும் என அதற்கு முன் ஒருபோதும் எண்ணியதில்லை. அதற்கு ஒரு காரணமும் உள்ளது. ஏனெனில் எனது பெற்றோரின் பூர்வீகம் உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களில் தொடங்கியது. நான் பிறந்தது ராஞ்சியில். வேலை செய்தது கொல்கத்தாவில். எனவே, சென்னையினர் என்னை தேர்வு செய்வார்கள் என நினைக்கவில்லை.

சென்னை எனக்கு நிறைய வியங்களை கற்றுக் கொடுத்துள்ளது என நம்புகிறேன். சேப்பாக்கத்தில் நாங்கள் விளையாடிய ஒவ்வொரு போட்டியிலும் ரசிகரின் ஆதரவு அமோகமாக இருக்கும். கிரிக்கெட் விளையாட்டு மீது அபரிமிதமான அன்பைவைத்துள்ளனர் தமிழ்நாட்டு மக்கள். கிரிக்கெட் குறித்த சிறந்த புரிதலையும் பெற்றுள்ள ரசிகர்கள். ஏனைய அணி வீரர்களையும் சென்னை ரசிகர்கள் உற்சாகப் படுத்துவார்கள், அதுதான் அவர்க ளது சிறப்பு.

கடைசியாக ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கிரிக்கெட்டை எப்போதுமே நான் திட்டமிட்டு விளையாடுவேன். நான் கடைசியாக நம் நாட்டில் விளையடிய சர்வதேச ஒருநாள் போட்டி எனது சொந்த ஊரான ராஞ்சியில். அதே போல எனது கடைசி ரி-20 சென்னையில்தான் இருக்கும். அது அடுத்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளோ இருக்கலாம். ஆனால், அது எனக்குத் தெரியாது என டோனி தனது உரையில் குறிப்பிட்டார்.




## ஐ.பி.எல்.சம்பியன் சூப்பர் கிங்ஸ் அணிக்கு சென்னையில் பாராட்டு விழா!

14 ஆவது ஐ.பி.எல். தொடரில் சம்பியன் பட்டம் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று பாராட்டு விழா நடைபெற்றது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளர் சீனிவாசன், கப்டன் டோனி, சுரேஷ் ரெய்னா, இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ், தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் மெய்யநாதன், தி.மு.க. எம்.பி. கலாநிதி வீராசாமி, அணி வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

அடுத்த ஆண்டு ஐ.பி.எல். சீசனில் மேலும் புதிய அணிகள் இணைவதால் போட்டி மிகவும் உற்சாகமாக இருக்கும் என இந்த நிகழ்வில் உரையாற்றிய இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (பி.சி.சி.ஐ.) செயலாளர் ஜெய் ா தெரிவித்திருக்கிறார். சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர்கள் விளையாடுகின்றமையைப் பார்க்க நீங்கள் அனைவரும் ஆவலுடன் காத்திருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். அதற்கான தருணம் வெகு தொலைவில் இல்லை. ஐ.பி.எல். 15 ஆவது சீசன் இந்தியாவில் நடைபெறவுள்ளது என்றும் ஜெய்ஷா குறிப்பிட்டார்.

சென்னை அணிக்கான பாராட்டு விழாவில் பங்கேற்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று குறிப்பிட்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னை என்றாலே சூப்பர்தான். முதல்வராக அல்ல, டோனியின் ரசிகராகப் பாராட்டு விழாவிற்கு வந்திருக்கிறேன். எனது குடும்பமே தந்தை, மகன், பேரன் என அனைவருமே டோனியின் ரசிகர்கள்தான். கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் உள்ளவன் நான். டோனி சென்னை ரசிகர்களின் செல்லப்பிள்ளை. தமிழ்நாட்டினர் பச்சைத் தமிழர்கள் என்றால், டோனி மஞ்சள் தமிழர். தங்களில் ஒருவராக டோனியை தமிழர்கள் கருதுகிறார்கள். எந்த நெருக்கடியிலும் ‘கூல்’ ஆக இருப்பவர்கள் கருணாநிதியும் டோனியும், என்றுதனதுதலைமையுரையில் தெரிவித்திருக்கிறார்.



## இந்திய - நியூஸிலாந்து ரி-20 தொடர் மூன்றாவது போட்டி இன்று

இந்திய – நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி–20 போட்டி இன்று கொல்கத்தாவில் நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட தொடரின் முதலிரு போட்டிகளிலும் வெற்றிபெற்று தொடரை இந்திய அணி கைப்பற்றியுள்ள நிலையில், மூன்றாவது போட்டியையும் வெல்லும் நோக்கில் இந்திய அணியும், ஆறுதல் வெற்றியையாவது பெறும் நோக்கில் நியூஸிலாந்து அணியும் இந்தப் போட்டியில் முனைப்புடன் களமிறங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள வேலைத்திட்டங்கள் அபிவிருத்திகள் தொடர்பாக டக்ளஸ் கலந்துரையாடல்



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள், அபிவிருத்திகள் உள்ளிட்டவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட அதிகாரிகளுடனான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு இணைத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நேற்றுக் காலை 10 மணியளவில் நடத்தப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட தொழிற்பயிற்சி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் அமைச்சர், சமுர்த்தி உதவி ஆணையாளர், உதவி பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈடுவைக்கப்பட்ட தமிழ்மக்களை மீட்க அர்ப்பணிப்புடன் செயற்படல் வேண்டும்

## டக்ளஸ் கோரிக்கை



தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் பிரபாகரனின் தவறான அணுகுமுறைகளால் தமிழ் மக்களை ஈடுவைத்து விட்டு அழிந்து விட்டதாகவும், அதிலிருந்து மக்களை மீட்க வேண்டி இருப்பதால் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 1438 குடும்பங்கள் சமுர்த்தி பயனாளர்களாக இருக்கின்ற நிலையில், மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக அதிகாரிகளால் தெளிவுபடுத்தப்பட்டதுடன் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு எடுத்துரைக்கப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் –

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் அணுகுமுறை காரணமாக சமுர்த்தித் திட்டம் வடக்கு மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டியதுடன், தமது அணுகுமுறையே சரியானது என்பதை நிரூபித்த விடயங்களில் ஒன்றாகச் சமுர்த்தித் திட்டம் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், மக்கள் தொடர்ந்தும் கையேந்தி வாழாமல் நிரந்தரமான வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் சமுர்த்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதேபோன்று, சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்ட போது இருந்ததைவிட தற்போது சமுர்த்தி உத்தியோகத்தர்களின் வாழ்வு முன்னேற்றமடைந்துள்ளமையைத் தன்னால் அவதானிக்கக் கூடியதாக இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தவறான தீர்மானங்களால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் செயலாற்ற வேண்டும் எனவும், அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சமுர்த்தி வேலைத் திட்டங்கள் பற்றிய முழுமையான விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது, சமுர்த்தி உத்தியோகத்தர்களால் இடமாற்றம் போன்ற நிர்வாகம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில், பொதுவாக நிர்வாக விடயங்களில் தலையிடுவதற்குத் தான் விரும்புபவரல்லர் என்றபோதிலும், நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்வு கிடைப்பதற்கு முயற்சிப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸாரை தாக்க முயன்ற அருண் சித்தார்த்தன் கைது



பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய அருண் சித்தார்த்தன் நீதிமன்ற பிடியாணை மூலம் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று (சனிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

'இராணுவத்தின் முக்கிய புள்ளி' எனத் தன்னை அழைத்து–வரும், சர்ச்சைக்குரிய அருண் சித்தார்த்தன், ஊடகவியலாளர்களுடன் தகராறில் ஈடுபட்டார் எனவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று இவரைக் கைதுசெய்யச் சென்ற போது, யாழ்ப்பாணம் பொலிஸாருடனும் முரண்பாட்டில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொள்ள முயன்றார் எனவும், 'இராணுவத்தின் முக்கிய புள்ளி' தான் என மிரட்டினார் எனவும், தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 'நல்லூர் கோவிலை இடித்து ஆலய சூழலில் பொது மல சல கூடம் அமைப்பேன்' என இந்து மதத்தை இழிவு படுத்தும் வகையில் முன்பு ஒரு தடவை, கருத்துக்களை இவர் முன்வைத்திருந்தார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## வன்முறைக் கும்பல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளாலிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவருவதாவது,

இந்த பகுதியில் உள்ள வீடொன்றினுள் அதிகாலை 2 மணியளவில் வாள்கள், கைக் கோடரிகள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் 10 இற்கும் மேற்பட்டவர்கள் அடங்கிய கும்பல் ஒன்று உட்புகுந்து வீட்டின் ஜன்னல்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு அவற்றின் கண்ணாடிகளை உடைத்தனர்.

பின்னர் வீட்டின் பிரதான கதவினை கோடாரியால் கொத்தினர். அதன்போது உசார் அடைந்த குடும்ப தலைவர் தனது மனைவி, பிள்ளைகளை அறைக்குள் வைத்து பூட்டி விட்டு, தனியாளாகத் தாக்குதலாளிகளை எதிர்கொள்ளத் துணிந்து சமையலறையில் இருந்த கத்தி மற்றும் மிளகாய் தூள் என்பவற்றால் தாக்குதலாளிகள் மீது தாக்குதலை மேற்கொண்டார்.

எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்த தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

அதேவேளை, அவரது மனைவி பளை பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக தகவல் வழங்கியதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தாக்குதலாளிகளைத் தமக்குத் தெரியும் என அவர்களின் வீடுகளை தாக்குதலுக்குள்ளான குடும்பம் இனங்காட்டியுள்ளது.

அதனடிப்படையில் அங்கு பொலிஸார் சென்றபோது சந்தேக நபர்கள் வீடுகளில் தங்கியிருக்கவில்லை. இந்நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அரசுடன் சிறிய கட்சியொன்று இணையும்?

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பின் போது, எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சிறிய அரசியல் கட்சி ஒன்று அரசாங்கத்துடன் இணைந்து ஆதரவாக வாக்களிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இது சம்பந்தமான சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் கடந்த சில தினங்களில் நடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது என சிங்கள ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுகளின் போது வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவளிக்க குறித்த சிறிய அரசியல் கட்சி இணக்கம் வெளியிட்டுள்ளதாகப் பேசப்படுகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.11.2021இல் வெளியிடப்பெற்றது.